பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 08 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நாட்டில் கரீப் பருவத்தில் வேளாண் உற்பத்தி பெருமளவு வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
2. ஐ நா-வின் பல்லுயிர் பெருக்க ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட தயாராக இருப்பதாக மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் ஆலோசகர் கூறியுள்ளார்.
3. இந்தியா வந்துள்ள சிலி வெளியுறவுத்துறை அமைச்சர் திரு அல்பர்டோ வான் கிளாவரன், இன்று புதுதில்லியில் மத்திய அமைச்சர் திரு ஜெய்சங்கரை சந்தித்து பேச்சு நடத்துகிறார்.
4. காலரா நோய் பரவாமல் தடுப்பதற்காக வாய் வழியாக தரப்படும் தடுப்பு மருந்தினை ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் சர்வதேச நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
5. சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலாளர் திரு ஜெய்ஷா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

நாட்டில் கரீப் பருவத்தில் வேளாண் உற்பத்தி பெருமளவு வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு வேளாண் உற்பத்திக்கான பரப்பளவு ஆயிரத்து 65 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளதாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் ஆயிரத்து 44 லட்சம் ஹெக்டேர் பரப்பளவு தானியங்கள் பயிரிடப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதில் நெற்பயிர் 394 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலும், பயறு வகைகள் 115 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலும், எண்ணெய் வித்துக்கள் 188 புள்ளி மூன்று ஏழு லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலும் பயிரிடப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

நாட்டின் ஒட்டுமொத்த நிலக்கரி உற்பத்தி ஏழு புள்ளி ஒன்று இரண்டு சதவீதம் உயர்ந்துள்ளதாக மத்திய நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பி,ல் கடந்த 25-ஆம் தேதி வரை நிலக்கரி உற்பத்தி 370 புள்ளி ஆறு ஏழு மில்லியன் டன்னாக உயர்துள்ளதாகவும், இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 346 மில்லியன் டன்னாக இருந்தது என்று கூறியுள்ளது.

இது கடந்த ஆண்டைக் காட்டிலும் ஐந்து புள்ளி நான்கு எட்டு சதவீதம் அதிகமாகும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி கையிருப்பு தற்போது 37 புள்ளி ஐந்து ஐந்து மில்லியன் டன்னாக உள்ளது என்றும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

சிலி நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு அல்பர்டோ வான் கிளாவரன் நேற்று புதுதில்லி வந்தடைந்தார்.

இன்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை சந்தித்து பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கிறார்.

தில்லியில் நடைபெறும் இந்தியா – சிலி நாடுகளுக்கு இடையேயான கூட்டுக் கூட்டத்தில் இருவரும் பங்கேற்கின்றனர்.

இந்த கூட்டத்திற்குப் பின் மும்பை செல்லும் சிலி நாட்டு அமைச்சர், இந்திய வர்த்தகத் துறையினர் ஏற்பாடு செய்துள்ள மாநாட்டிலும் கலந்து கொள்கிறார்.

**[]<<<>>>[]**

ஐ நா-வின் அடுத்த பொதுச்சபை கூட்டத்தின்போது உயர் கடல் ஒப்பந்தம் என்று அழைக்கப்படும் பல்லுயிர் பெருக்க ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட தயாராக இருப்பதாக மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் ஆலோசகர் திரு பி கே ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற பயிலரங்கு ஒன்றில் பேசிய அவர், இது தொடர்பான ஒப்பந்தத்தை முழுவதுமாக ஆய்வு செய்து வருவதாகவும், இதில் சில பிரிவுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

எதிர்காலத்தில் ஏற்படும் சவால்களை சமாளிக்கும் விதத்தில் பல்வேறு நாடுகளுடன் இது குறித்து கலந்து ஆலோசிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றம் மற்றும் நீல பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் அமையும் என்று அவர் குறிப்பிட்டார்.

கடல் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாப்பதற்கும், பருநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கும் உலகளாவிய முயற்சிக்கு பங்களிக்கும் வகையில் இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

உலக சராசரியுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் கடல் மீன்பிடி தொழில் மூலம் கார்பன் வெளியீடு 17 புள்ளி ஏழு சதவீதம் குறைவாக உள்ளது என்று திரு பி கே ஸ்ரீவஸ்தவா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

மத்திய அரசு கொண்டு வந்துள்ள வக்ஃக் மசோதா மீது பொதுமக்கள், அரசுசாரா நிறுவனங்கள், வல்லுநர்கள், வக்ஃப் வாரிய உறுப்பினர்கள், பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம் என நாடாளுமன்ற கூட்டுக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக மக்களவை அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தபால் மூலமாகவோ, மின் அஞ்சல் மூலமாகவோ தங்கள் கருத்துக்களை 15 நாட்களுக்குள் அனுப்பலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் உள்ளிட்டோர் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்து நாடாளுமன்றத்தின் வரும் குளிர்கால கூட்டத்தொடரின் கடைசி நாளில் இந்த கூட்டுக்குழு அறிக்கை தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

பீகாரிலிருந்து மாநிலங்களவைக்கு இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு உபேந்திர குஷ்வாகா, பிஜேபி வேட்பாளர் திரு மனன்குமார் மிஸ்ராவும் மாநிலங்களவைக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் 29 வேட்பாளர்கள் கொண்ட மூன்றாவது பட்டியலை அக்கட்சி நேற்று வெளியிட்டுள்ளது.

நவோத்ரா தொகுதியில் திரு தேவந்திரசிங் ராணாவும், உத்தம்பூர் மேற்குதொகுதியில் திரு பவன்குப்தாவும் போட்டியிடுகின்றனர்.

பூஞ்ச் ஹவேலி தொகுதியில் திரு சௌத்திரி அப்துல் கனியும், மாதா வைஷ்ணவ் தேவி தொகுதியில் திரு பல்தேவ்ராஜ் சர்மா ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

[]<<<>>>[]

தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அரசுமுறை பயணமாக நேற்று சென்னையிலிருந்து அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ்நாட்டிற்கு அதிக முதலீடுகளை ஈர்க்கும் விதத்தில் தமது அமெரிக்க பயணம் இருக்கும் என்று தெரிவித்தார்.

ஏற்கனவே ஐக்கிய அரபு அமிரகம், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு தாம் பயணம் மேற்கொண்டதன் மூலம் தமிழ்நாட்டிற்கு பத்தாயிரத்து 882 கோடி ரூபாய் மதிப்பிலான 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டதாகவும், இதன்மூலம் 18 ஆயிரத்து 521 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த அமெரிக்க பயணத்தின்போது பிரபல நிறுவனங்களின் தலைவர்கள் தம்மை சந்திக்க இருப்பதாகவும், இதன்மூலம் மேலும் கூடுதல் முதலீடுகள் தமிழகத்திற்கு கிடைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அதிக அளவில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து வருவதாகவும், இதன்மூலம் பொருளாதாரத்தில் தமிழகம் முதலிடத்தை எட்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த பயணத்தின்போது அமெரிக்க வாழ் தமிழர்களையும் தாம் சந்திக்க இருப்பதாகவும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் மாநில அமைச்சர்கள் மற்றும் திமுக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மூத்த நிர்வாகிகள் முதலமைச்சரை வழியனுப்பி வைத்தனர்.

[]<<<>>>[]

காலரா நோய் பரவாமல் தடுப்பதற்காக வாய் வழியாக தரப்படும் தடுப்பு மருந்தினை ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் சர்வதேச நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

உலக அளவில் பரவி வரும் காலரா நோயை கட்டுப்படுத்துவதற்கு இந்த தடுப்பு மருந்து உதவிடும் என்று அந்நிறுவனத்தின் தலைவர் டாக்டர் கிருஷ்ணா இலா தெரிவித்துள்ளார்.

உலக அளவில் 40 மில்லியன் டோசஸ் குறைவாக இருப்பதாகவும், அதை பூர்த்தி செய்யும் விதத்தில் இந்த தடுப்பு மருந்து இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த மருந்து ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு இரண்டுவார கால இடைவெளியில் இரண்டு முறை வழங்கலாம் என்றும் டாக்டர் கிருஷ்ணா இலா கூறியுள்ளார்.

கடந்த ஓராண்டில் 31 நாடுகளைச் சேர்ந்த எட்டு லட்சம் பேர் காலரா நோயால் பாதிக்கப்பட்டனர். இதில் ஐயாயிரத்து தொள்ளாயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

ஆந்திர மாநிலத்தில் உள்ள இந்து கோவில்களை தூய்மையாகவும், அமைதியான முறையிலும் பராமரிக்க வேண்டுமென்று அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அமராவதியில் நேற்று அம்மாநில அறநிலையத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட அவர், பக்தர்கள் தங்குவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கோவில் பூஜாரிகளுக்கு வழங்கப்படும் மாத ஊதியம் பத்தாயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கவும் அவர் உத்தரவிட்டார்.

கோவிலில் பெறப்படும் நிதியை முறையாக பயன்படுத்த வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

கோவில்களை சீரமைப்பதற்கான பணிகளை உடனடியாக தொடங்குமாறு திரு சந்திரபாபு நாயுடு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தால் பெண் மருத்துவர் கொலை செய்யப்பட்ட சம்பவதை கண்டிக்கும் வகையில் அம்மாநிலத்தில் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு அம்மாநில பிஜேபி அழைப்பு விடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவதாக பிஜேபி மாநில தலைமை தெரிவித்துள்ளது.,

இதற்கிடையே அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், பொது போக்குவரத்து ஆகியவை வழக்கம்போல் செயல்படும் என்று மேற்குவங்க மாநில அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

அருணாச்சல பிரதேச மாநிலத்தில் ராணுவ வீரர்கள் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதில் மூன்று ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

ராணுவ வீரர்கள் சென்ற வாகனம் சுபான்ஸ்ரீ மாவட்டத்தில் மலைப்பாங்கான பகுதியில் உள்ள பள்ளத்தில் விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து குறித்து ராணுவம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மாலத்தீவில் இந்திய அரசு உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு திட்டங்கள் குறித்து மத்திய அரசின் சிறப்புச் செயலர் திரு அனுராக் அகர்வால் தலைமையிலான குழுவினர் நேற்று ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது மாலத்தீவு அமைச்சர்கள் மற்றும் அந்நாட்டின் மூத்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

நாளை வரை இந்த குழு தமது ஆய்வுப் பணியை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் கௌரவச் செயலாளர் திரு ஜெய்ஷா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
வரும் டிசம்பர் மாதம் ஒன்றாம் தேதி அவர் பதவியேற்றுக் கொள்கிறார்.
35 வயதான திரு ஜெய்ஷா, சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிக்கு மிகக்குறைந்த வயதில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.
அடுத்த மாதம் எட்டாம் தேதி வரை இப்போட்டிகள் நடைபெறுகின்றன.
இந்தியாவின் சார்பில் 84 பேர் இப்போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

இவர்கள் 12 பிரிவுகளில் விளையாட உள்ளனர்.

குறிப்பாக பாரா சைக்கிளிங், பாரா ஜூடோ, பாரா படகுப்போட்டிகளில் முதல் முறையாக இந்திய அணி பங்கேற்கிறது.

**[]<<<>>>[]**

20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக தடகளப் போட்டியில் 400 மீட்டர் தொடர் ஓட்டப் பிரிவு இறுதிப்போட்டிக்கு இந்தியாவின் ஜெய்குமார், நீறுபாத்தக், ரிகான் சௌத்திரி, சந்திரமோல் சாபு ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.

***End of News***